# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண். 21/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | **சுரேஷ்** | மதம் | .. | **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. | **சித்தன் (எ) காந்தி** | தொழில் | .. | --- |
| வயது | .. | 37 | நாள் | .. | 10.10.2025 |
| கிராமம் | .. | **அ.புதூர்** | | | |
| வட்டம் | .. | **சங்ககிரி** | | | |

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ஆம் நாள் வெள்ளிகிழமை சுரேஷ் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திருமதி. இரா.இளமதி பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>வாதிகள் தரப்பு 1-ஆம் சாட்சியின் முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் 3-ம் வாதி ஆவேன். நான் இவ்வழக்கில் வாதிகள் தரப்பு 1-ஆம் சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அந்த விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) 18.03.1970 தேதியிட்ட ஐயண்ணன் என்பவர் சின்னைய கவுண்டருக்கு எழுதிகொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் பதிவு நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 13.01.1973 தேதியிட்ட ஐயண்ணன் என்பவர் சின்னதம்பி என்கின்ற கருப்பண்ணா கவுண்டர் என்கின்ற கருப்புகவுண்டர் அவர்களுக்கு வழங்கிய பதிவு செய்யப்பட்ட விடுதலை பத்திரம் பதிவு நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 01.09.1976 தேதியிட்ட கூளையன் என்கின்ற சின்னையகவுண்டர் மற்றும் அண்ணாமலை ஆகியோர் ஏ. பெரியண்ணன் அவர்களுக்கு எழுதிகொடுத்த பதிவு செய்யப்பட்ட விடுதலை பத்திரம் பதிவு நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 09.07.1985 தேதியிட்ட சின்னதம்பி என்கின்ற கருப்பண்ணகவுண்டர் என்கின்ற கருப்புகவுண்டர் தனம் என்பவர்களுக்கு எழுதிகொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் பதிவு நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 16.03.1987 தேதியிட்ட காந்தி என்கின்ற சித்தன், தனம் என்பவர்களுக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 30.05.2008 தேதியிட்ட பதிவு எண். 2354/2008 உடைய போலியான பதிவு செய்யப்பட்ட விடுதலை பத்திரம் - இது விடுதலை பத்திரம் என்ற தலைப்பில் முதல் பிரதிவாதியால் ஐயண்ணன் பெயருக்கு எழுதி வைக்கப்பட்டது. பதிவு நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 02.06.2008 தேதியிட்ட பதிவு எண். 2360/2008 உடைய போலியான பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் - இது விடுதலை பத்திரம் என்ற தலைப்பில் முதல் பிரதிவாதி 2-ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி வைக்கப்பட்டது. பதிவு நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 14.07.2008 தேதியிட்ட தனம் என்பவர் காந்தி என்கின்ற சித்தன் அவர்களுக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் பதிவு நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 23.07.2008 தேதியிட்ட பதிவு எண்.3315/2008 உடைய போலியான பதிவு செய்யப்பட்ட பத்திரம் - இது தான பத்திரம் என்ற தலைப்பில் ஐயண்ணன் மற்றும் முதல் பிரதிவாதி ஆகியோர் 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு எழுதி வைக்கப்பட்டது. பதிவு நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) 24.09.2008 தேதியிட்ட காந்தி என்கின்ற சித்தன் மாரிமுத்துவிற்கு எழுதிகொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் பதிவு நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) 28.01.2023 தேதியிட்ட பதிவு எண்.518/2023 உடைய போலியான பதிவு செய்யப்பட்ட பத்திரம் - இது கிரய பத்திரம் என்ற வகையில் 2 வது பிரதிவாதி முதல் பிரதிவாதிக்கு எழுதி வைக்கப்பட்டது. பதிவு நகல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12) 29.02.2024 தேதியிட்ட பட்டா எண் 135 சர்வே எண்.60/1A பதிவிறக்கப்பட்ட நகல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13) 10.03.2024 தேதியிட்ட FMB(புல வரைபடம்) - சர்வே எண் 60 பதிவிறக்கப்பட்ட நகல் **வா.சா.ஆ.**13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14) 05.02.2024 தேதியிட்ட கந்தாய இரசீது அசல் **வா.சா.ஆ.**14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15) 19.03.2022, 26.02.2024 தேதியிட்ட வீட்டு வரி இரசீதுகள் (2 எண்ணிக்கைகள்) அசல் மற்றும் பதிவிறக்கப்பட்ட நகல் **வா.சா.ஆ.**15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16) மின் இணைப்பு விவரங்கள் பதிவிறக்கப்பட்ட நகல் **வா.சா.ஆ.**16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

17) 01.07.2022 தேதியிட்ட மின்சார கட்டணம் இரசீது அசல் **வா.சா.ஆ.**17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

18) 14.02.2024, 15.12.2023,17.10.2023 தேதியிட்ட மின்சாரம் சார்ந்த இரசீதுகள் (3 எண்ணிக்கைகள்) பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.**18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

19) 02.08.2022, 14.09.2022 தேதியிட்ட ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் நீர் வரி செலுத்திய இரசீதுகள் (2 எண்ணிக்கைகள்) அசல் **வா.சா.ஆ.**19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

20)12.07.2023 தேதியிட்ட காந்தி என்கின்ற சித்தன் அவர்களின் இறப்பு சான்றிதழ் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.**20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

21)17.07.2023 தேதியிட்ட காந்தி என்கின்ற சித்தன் அவருக்கான வாரிசு சான்றிதழ் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.**21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.10.10 17:14:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.